விரைந்துவாருமென்று திண்ணர்செல்லநாணனே
இருக்குதிம்மலையில் குடுமித்தேவர்நாங்கள்
வரிக்கும்பிடலாம்போய் எனத்திண்ணனொல்யாரம்
இப்போகுறைநின்றதென்றே. ௨

குருமாநீழலில் ஆற்றங்கரைதனில்
இருவித்துப்பந்தியை நெருப்பையுண்டாக்கென்று
தரிசனஞ்செய்திப்போ வருவோமென்றுநாணன்
தொடர்ந்தேறினார்திண்ணர்
திருமலையேறிசிவலிங்கங்கண்டபோதே
பரமனருட்பார்வை பெற்றுப்பிரிந்ததாய்
அருங்குழந்தையைக்கண்டு தழுவியழுவதுபோல்
அலறிமுத்தமிட்டழுதார்.

ஒருதுணையில்லாமல் வேடர்போற்றனியே
இருப்பதேது துட்ட மிருகமிருக்குங்காட்டிடம்
திருமுடிதனில்நீரை வார்த்துப்பச்சிலைபூ
தரித்தவராரோவென்றார்
அருகிலிருக்குநாணன் ஐயேஉன்தந்தையோ
டொருகால்வரவப்போது ஒருவேதியன்வந்து
திருமுடியில்நீர்வார்த்துப் பூப்போட்டுப்பேசிப்பின்
தன்னுணவையூட்டினான். ௩

திருக்காளத்திசர்க்குப் பிரியனானேனென்று
இறைச்சிகொள்ளவோய் பிரிந்தழுதிருப்பீ

சித்தத்தைச்சிவன்பாலே வைத்தாரும்
சிறந்ததிருவாரூர்ப் பிறந்தாரும். உ.

அத்தனைமுப்போதுந் தீண்டுவரும்
அரல்முழுநீறணி முனிவர்களும். ௩.

கத்தனையப்பாலுஞ் சார்ந்தாரும்
கேசவன்துதிசிவ பதமடைந்தார். ச.

## பூசலார்நாயனார்.

இராகம்-செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

தொண்டமண்டலந்திரு நின்றவூர்தனில்மனத்
தொண்டுசெய்வேதியர் பூசலார்.

சரணங்கள்.

அண்டர்பிரானுக் காலயங்கட்டுதற்
கற்பமுங்கிடையா தவர்மனத்தேகட்டும். க.

காஞ்சிபுரத்தினில் காடவராஜர்
கட்டுகோவிற்கன்று கடவுள்வாரோனென்றும். உ.

பூசலார்கோயிலிற் போவேனென்ன
ஆசையுடனரசர் வந்தவரைப்பணியும். ௩.

